**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - 2022**

---

சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 3727-எஸ்ஆர்ஐ(சீஓஎல்) மற்றும் 0618 - எஸ்ஆரஐ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி**

கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் மத்திய, வட மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. தரமான அத்தியாவசியமான சுகாதார சேவைகளுக்கு தொடர்ச்சியான கவனிப்பு மற்றும் உலகளாவிய அணுகுதலை வழங்குதல் என்ற கருத்தின் அடிப்படையில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையின் வினைத்திறன், சமபங்கு மற்றும் பதிலழிக்கக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் ரூபா 5,813 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 37.5 மில்லியன் சலுகை கடனாகவும் ரூபா 1,938 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 12.5 மில்லியன் மானியமாகவும் என ரூபா 7,125 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் கூட்டுமொத்த தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 திசெம்பர் 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2023 நவம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் | செயற்திட்ட வழிநடாத்தல் குழு குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டிய போதிலும் குழு மீளாய்வாண்டில் இரண்டு முறை மாத்திரமே கூடியது. | அந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக வருடத்தின் ஒவ்வொரு காலாண்டிலும் எங்களால் வழிநடத்தல் குழுக் கூட்டங்களை நடாத்த முடியவில்லை. | பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | |
| 04 மாவட்ட வைத்தியசாலைகளின் நிர்மாணம் | 100 | 1 – இல்லை<br>2 – 49 - 70 | நிர்மாணங்கள் தொடர்பாக எதிர்பார்த்த முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு, நிர்மாணப் பொருட்களின் வரலாறு காணாத அதிகரிப்பு மற்றும் அந்தக் காலப்பகுதியில் அவை கிடைக்காததால் நிர்மாணப் பணிகளை ஒப்பந்ததாரர்கள் நிறுத்தியதன் காரணமாக சிவில் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. |
| 02 மாவட்ட வைத்தியசாலைகளின் நிர்மாணம் | 90 | இல்லை | | |
| 05 பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுகளின் நிர்மாணம் | 25 | இல்லை | | |
| 01 மாவட்ட சுகாதார நிலையத்தின் நிர்மாணம் | 23 | இல்லை | | |

**முகாமைத்துவத்தின் பதில்** பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு, நிர்மாணப் பொருட்களின் வரலாறு காணாத அதிகரிப்பு மற்றும் அந்தக் காலப்பகுதியில் அவை கிடைக்காததால் நிர்மாணப் பணிகளை ஒப்பந்ததாரர்கள் நிறுத்தியதன் காரணமாக சிவில் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அனைத்து ஒப்பந்ததாரர்களும் சிவில் ஒப்பந்தங்களுக்கான விலை உயர்வைச் சேர்க்குமாறு கோரியுள்ளதுடன் செயற்திட்டமானது சிறிய வேலை ஒப்பந்தங்களுக்கான விலை அதிகரிப்பு உட்பிரிவைச் சேர்ப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கீகாரத்தை பெற வேண்டியிருந்தது. இதனால் சிவில் பணி ஒப்பந்தங்களில் மெதுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** விரும்பிய முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| | ரூபா 109 மில்லியன் பெறுமதியான 09 நிர்மாண ஒப்பந்தங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 06 ஒப்பந்தங்கள் ஒரு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளன. செயலாற்றல் பிணைமுறிகள் மூலம் ரூபா 690,834 அறவிடப்பட்டது என குறிப்பிடப்பட்ட போதிலும் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு ஒப்பந்தம் தொடர்பான ரூபா 3 மில்லியன் செயலாற்றல் உத்தரவாதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 38 மில்லியன் ஒப்பந்தம் தொடர்பான வழக்கு இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவ்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | 2022 யூன் 09 இல் ரூபா 690,834.10 (ஒப்பந்த பெறுமதியின் 10%) பெறுமதியான செயலாற்றல் பிணைமுறிகளை செயற்திட்டம் பறிமுதல் செய்துள்ளது. மத்திய மாகாண செயற்திட்ட அமுல்ப்படுத்தல் பிரிவினால் வழங்கப்பட்ட வங்கி கூற்று மற்றும் உத்தியோகபூர்வ பெறுவனவுச்சீட்டு ஆகியவற்றின் பிரதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் ஒருவரின் ரூபா 2,682,182 பெறுமதியான பிணைமுறிறை காசாக்குவதற்கு வங்கியிடம் கோரிக்கை விடுத்த போதிலும் ஒப்பந்ததாரர் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடர்ந்துள்ளார். ஏப்ரல் 22 இல் ரூபா 1,578,000 செயலாற்றல் பிணைமுறி காசாக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மீதமுள்ள பெறுமதியாக ரூபா 1,974,233.00 ஐ செலுத்துமாறு ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளோம். மேலும் ஒரு ஒப்பந்தத்தை முடிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக கொத்தணி முகாமைத்துவட் நிபுணருக்கு ரூபா 751,894 தொகை செலுத்தப்பட்டது. இந்த உத்தியோகத்தர் செயற்திட்டத்திற்குச் சமர்ப்பித்த வேலை நிறைவேற்றல் அறிக்கையின் பிரகாரம் ஒரே நாளிலும் ஒரே காலத்திலும் வெவ்வேறு இடங்களில் அவர் வேலையில் ஈடுபட்டார் என குறிப்பிடப்பட்டது. அத்தகைய சேவையில் எவ்வாறு ஈடுபடுவது என்பது கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது. | இந்த விஜயத்தின் போது ஹெட்டிபொல, ஹதுங்கமுவ, மாரக, லக்கல, ஹத்தோட்டஅமுன மற்றும் இல்லுக்கும்புர ஆகிய வைத்தியசாலைகளை உத்தியோகத்தர் பார்வையிட்டுள்ளார். எனினும், தம்புள்ளை கொத்தணியில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கான தனது அறிக்கையில் தனித்தனியாக பார்வையிடப்பட்ட நேரத்தை அந்த உத்தியோகத்தர் வழங்கியிருக்கவில்லை, மேலும் வேலை நிறைவேற்றல் அறிக்கையில் நாளின் தொடக்க நேரம் மற்றும் இறுதி நேரம் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. | கொடுக்கப்பட்ட தகவல் சரியானதா என்பதைச் சரிபார்த்த பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஒக்தோபர் 11 முதல் 2021 ஒக்தோபர் 10 வரையிலான காலத்திற்கு மாத்திரமே நியமிக்கப்பட்ட சுற்றாடல் நிபுணருக்கு ரூபா 1.6 மில்லியன் தொகை முறையான அங்கீகாரமின்றி 2021 ஒக்தோபர் 13 முதல் 2021 திசெம்பர் வரை நாளொன்றிற்கு ரூபா 44,000 விலைவிகிதத்தில் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சுற்றாடல் நிபுணரின் ஒப்பந்தம் முதலில் 2019 ஒக்தோபர் 11 முதல் ஒரு வருடத்திற்கு நியமிக்கப்பட்டது. இது வருடாந்தம் நீடிக்கப்பட்டு 2021 ஒக்தோபரில் 2022 ஒக்தோபர் 10 வரை நீடிப்பு வழங்கப்பட்டது. எனினும், 2021 ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான ஆலோசகர் மதிப்பாய்வுக் குழு அறிக்கைகளில் 2021 ஒக்தோபர் 10 வரை மாத்திரமே நீடிப்பு என தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 2022 ஒக்தோபர் 10 என திருத்தப்பட வேண்டும், மேலும் ஆரம்ப நீடிப்பு ஒப்பந்தம் ஆலோசனைக் கோவையில் உள்ளது. | அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படக்கூடாது. |